# கொவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பாக

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்




Updated January 29, 2021

World Health Organization
Sri Lanka

# கொவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பாக

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

World Health Organization
Sri Lanka

Updated January 29, 2021

01 **தடுப்பூசிகளின் பின்னணி** 06

தடுப்பூசிகள் என்றால் என்ன? 07

தடுப்பூசி கொண்டிருப்பது என்ன? 07

தடுப்பூசிகள் எவ்வாறு செயல்படுகின்றன? 07

தடுப்பூசிகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன? 08

குடிப்பரம்பல்/ சனத்தொகை நோய் எதிர்ப்பு சக்தி என்றால் என்ன? தடுப்பு மருந்தேற்றலின் அடிப்படையில் இதன் கருத்து யாது? 09

02 **கொவிட்-19 தடுப்பூசிகளின் பின்னணி** 10

பாரம்பரிய தடுப்பூசி உருவாக்கத்திற்கும் மற்றும் கொவிட்-19 தடுப்பூசி உருவாக்கத்திற்கும் என்ன வித்தியாசம்? 11

பல்வேறு வகையான கொவிட்-19 தடுப்பூசிகள் யாவை? 11

எத்தனை வகையான கொவிட்-19 தடுப்பூசிகள் 3ம் கட்ட பரீட்சார்த்த சோதனைகளை நிறைவு செய்துள்ளன? அவை எந்த தடுப்பூசிகள்? 14

கொவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் உயர்தரமானவையா? 14

நியூக்ளிக்கமிலம் அல்லது mRNA தடுப்பூசிகள் பாதுகாப்பானவையா? 14

தீவிர குளிர் சங்கிலி தடுப்பூசிகள் என்றால் என்ன? பயன்பாட்டின் அடிப்படையில் அர்த்தம் யாது? 15

கொவிட்-19 தடுப்பூசிகள் நீண்டகால நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குகின்றனவா? 15

கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்? 15

ஒரு நபர் தடுப்பூசி மூலம் கொவிட்-19 ஐப் பெற முடியுமா? 15

கொவிட்-19 தடுப்பூசி பெற்ற ஒருவர் கொவிட்-19 ஐப் பெற முடியுமா? 16

ஒரு நபர் ஏற்கனவே கொவிட்-19 பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டு வந்த பின்னும், அவர்கள் தற்போது கொவிட்-19 தடுப்பூசியை பெற வேண்டுமா? 16

கொவிட்-19 தடுப்பூசிகள் கொவிட்-19 இன் பல்வேறு திரிபுகளிலிருந்தும் பாதுகாக்கிறதா? 16

கொவிட்-19 தடுப்பூசிகளிலிருந்து பக்க விளைவுகள் உண்டா? 17

ஒரு தடுப்பூசிக்கு ஈடாக மற்றொரு தடுப்பூசியை மாற்றி வழங்க முடியுமா? 17

03 **கொவிட்-19 தடுப்பூசிக்கான அனுமதி** 18

கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டு பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றன? 19

அவசரகால பயன்பாட்டிற்காக பட்டியலிடும் செயன்முறை (EUL) என்றால் என்ன? 19

அவசரகால பயன்பாட்டிற்காக பட்டியலிடும் செயன்முறை (EUL) என்றால் என்ன? 20

ஒரு தடுப்பூசிக்கு EUL கிடைத்தவுடன், அதை ஒவ்வொரு நாட்டிலும் பயன்படுத்த முடியுமா? 20

## 04 கொவிட்-19 தடுப்பூசி விநியோகம் 21

| | |
|---|---|
| ACT-விரைவாக்கி என்றால் என்ன? | 22 |
| COVAX வசதிப்படுத்துகை என்றால் என்ன? | 22 |
| கொவிட்-19 தடுப்பூசியை முதலில் யார் பெறுவார்கள்? | 22 |
| கொவிட்-19 தடுப்பூசியை யார் பெற மாட்டார்கள்? | 23 |
| COVAX மூலம் எந்த தடுப்பூசிகளைப் பெறுவோம்? | 24 |

## 05 மேலதிக கேள்விகள் 25

| | |
|---|---|
| கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன? | 26 |
| நாட்டின் தயார்நிலை என்றால் என்ன? | 26 |
| இலங்கைக்கு ஒரு வகையான தடுப்பூசி கிடைக்குமா? | 26 |
| கொவிட்-19 தடுப்பூசியின் உருவாக்கம் என்பது தொற்றுநோய் முடிந்துவிட்டதாக அர்த்தப்படுமா? | 27 |

# தடுப்பூசிகளின் பின்னணி



## தடுப்பூசிகள் என்றால் என்ன?

தடுப்பூசிகள் ஒரு குறிப்பிட்ட நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்கு உடலைத் தூண்டும் தயாரிப்புகளாகும். மனிதர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும் போது, அது தடுப்பு மருந்தேற்றல் என்று அழைக்கப்படுகிறது. தடுப்பு மருந்தேற்றல் என்பது தீங்கு விளைவிக்கும் நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் எளிய, பாதுகாப்பான மற்றும் பயனுள்ள வழிமுறையாகும். குறிப்பிட்ட நோய்த்தொற்றுகளுக்கான கிருமிகளுடன் நீங்கள் தொடர்பு கொள்வதற்கு முன்பு எதிர்ப்பை உருவாக்க உங்கள் உடலின் இயற்கையான எதிர்ப்பு பொறிமுறையை இது பயன்படுத்துகிறது. இது உங்கள் நிர்ப்பீடனத் தொகுதியை வலுவாக்குவதுடன் முன்பே தயார்நிலைப்படுத்துகிறது.

## தடுப்பூசி கொண்டிருப்பது என்ன?

சில தடுப்பூசிகள் நோயை ஏற்படுத்தும் அதே கிருமியை கொண்டுள்ளது (உ+ம். சின்னம்மை தடுப்பூசியில் சின்னம்மை வைரஸ் உள்ளது), ஆனால் கொல்லப்பட்ட அல்லது பலவீனமான கிருமி உங்களை நோய்வாய்ப்படுத்தமாட்டாது (அதாவது, உங்களில் நோயை உருவாக்கல்). ஏனைய தடுப்பூசிகளில் நோயை உருவாக்கும் கிருமியின் பகுதிகள் மட்டுமே உள்ளன் மற்றயவை தடுப்பூசி துணிக்கைகளுக்கு ஒப்பான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு கலங்களைத் தூண்டும் மரபணுக்களை எடுத்துச் செல்லும் வெவ்வேறு காவிகளைப் பயன்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, ஆக்ஸ்போர்டு அஸ்ட்ராஷெனெகா தடுப்பூசி சிம்பன்சி அடினோவைரஸை காவியாகப் பயன்படுத்துகிறது, மேலும் ஸ்பூட்னிக் V தடுப்பூசி மனித அடினோவைரஸைப் பயன்படுத்துகிறது. இரண்டும் கொவிட்-19 வைரஸின் ஸ்பைக் புரதங்களை உருவாக்குவதற்கு மனித உடலைத் தூண்டி வைரஸின் மரபணுக்களை கடத்துகின்றன.

தடுப்பூசிகளில் பிற பொருட்களும் உள்ளன:

- துணை மருந்துகள், இது நமது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும், தடுப்பூசிகள் சிறப்பாக செயல்பட உதவுகிறது
- நற்காப்பு பதார்த்தங்கள், இது பிற கிருமிகளுடன் தொடர்புபடுவதைத் தடுப்பதன் மூலம் தடுப்பூசி பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யும்
- நிலைப்படுத்திகள், அவை சேமித்தல் மற்றும் கொண்டுசெல்லின் போது தடுப்பூசியைப் பாதுகாக்கின்றன

தற்போது கிடைக்கக்கூடிய கொவிட்-19 தடுப்பூசிகளில் எதுவும் மாடுகள் அல்லது பன்றிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பொருட்களை கொண்டிருப்பதில்லை.

## தடுப்பூசிகள் எவ்வாறு செயல்படுகின்றன?

தடுப்பூசிகள் உங்கள் உடலில் நோயை உருவாக்கும் கிருமிக்கு மிகவும் ஒத்த ஒரு பிற பொருளை (உடலில் காணப்படாத ஒரு பொருள்) அறிமுகப்படுத்துகின்றன் இது ஒரு பிறபொருள் (Antigen) என்று அழைக்கப்படுகிறது. அறிமுகப்படுத்தப்பட்ட பிறபொருளை உங்கள் உடல் ஒரு அச்சுறுத்தலாக கணிப்பதுடன், பிறபொருளெதிரியை உருவாக்க உங்கள் நிர்ப்பீடனத் தொகுதியை தூண்டும். பிறபொருளெதிரிகள் என்பது நோயை எதிர்த்துப் போராடுவதற்கு நிர்ப்பீடனத் தொகுதியால் இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் புரதங்களாகும். இதே செயன்முறை தான் நீங்கள் உண்மையான நோயை உருவாக்கும் கிருமிக்கு முகங்கொடுத்தாலும் ஏற்படும். இருப்பினும், தடுப்பூசிகளில் கொல்லப்பட்ட அல்லது பலவீனமான கிருமிகள், கிருமியின் பகுதிகள் அல்லது மாற்றீடான காவிகள் மட்டுமே இருப்பதால், அவை நோயை ஏற்படுத்தாது அல்லது அதனுடனிணைந்த சிக்கலான ஆபத்தை ஏற்படுத்தாது.

தடுப்பு மருந்தேற்றிய பின்னர், தொற்று ஏற்பட்டால் அல்லது வெளிக்காட்டப்பட்டால் தொடர்ந்து அதை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்பதையும் நோயை உருவாக்கும் கிருமியையும், உங்கள் உடல் நினைவில் வைத்திருக்கும். எனவே, நீங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை விருத்திசெய்து கொள்கிறீர்கள். நோய் எதிர்ப்பு சக்தி என்பது எதிர்காலத்தில் நீங்கள் கிருமிக்கு வெளிப்படுத்தப்பட்டால், நீங்கள் நோய்வாய்ப்படுவதற்கு முன்பு உங்கள் நிர்ப்பீடனத் தொகுதி அதை விரைவாக அழிக்கக்கூடும்.

இதுதான் தடுப்பூசிகளை மிகவும் சக்திவாய்ந்ததாக ஆக்குகிறது. நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் அல்லது குணப்படுத்தும் பெரும்பாலான மருந்துகளைப் போலல்லாமல், தடுப்பூசிகள் அவற்றைத் தடுக்கின்றன.

# தடுப்பூசிகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?

பெரும்பாலான தடுப்பூசிகள் பல தசாப்தங்களாக பயன்பாட்டில் உள்ளன, மேலும் ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான மக்கள் அவற்றைப் பாதுகாப்பாகப் பெறுகிறார்கள். எல்லா மருந்துகளையும் போலவே, ஒவ்வொரு தடுப்பூசியும் ஒரு நாட்டின் தடுப்பு மருந்தேற்றும் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு அது பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்த செறிவான மற்றும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். புதிய தடுப்பூசிகள் முதன்முதலில் முன் சிகிச்சை கட்டத்தில் விலங்குகளில் அவற்றின் பாதுகாப்பு மற்றும் நோயைத் தடுக்கும் திறனை மதிப்பிடுவதற்காக சோதிக்கப்படுகின்றன. பின்னர், அவை மூன்று கட்டங்களாக மனித பரீட்சார்த்த சிகிச்சைகளில் சோதிக்கப்படுகின்றன.

### கட்டம் 1

இந்த தடுப்பூசி ஒரு சிறிய எண்ணிக்கையிலான தன்னார்வலர்களுக்கு அதன் பாதுகாப்பை மதிப்பிடுவதற்கும், நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்குவதை உறுதி செய்வதற்கும், பொருத்தமான அளவை தீர்மானிப்பதற்குமென வழங்கப்படுகிறது. பொதுவாக, இந்த கட்டத்தில், இளம் மற்றும் ஆரோக்கியமான பெரியவர்களில் தடுப்பூசிகள் பரிசோதிக்கப்படுகின்றன.

### கட்டம் 2

நோய் எதிர்ப்பு (விளைதிறன்) மற்றும் சாத்தியமான பக்க விளைவுகள் (பாதுகாப்பு) ஆகியவற்றை உருவாக்கும் திறனை மேலும் மதிப்பிடுவதற்கு இந்த தடுப்பூசி பல நூறு தன்னார்வலர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த கட்டத்தில் பங்கேற்பாளர்கள் தடுப்பூசி ஏற்றவேண்டிய நபர்களின் ஒத்த இயல்புகளை (உ+ம். வயது, பாலினம்) கொண்டிருப்பார்கள். இந்த கட்டத்தில் பல்வேறு வயதுக் குழுக்கள் மற்றும் தடுப்பூசியின் வெவ்வேறு அளவு உருவாக்கங்களை மதிப்பிடுவதற்கு பொதுவாக பல பரீட்சார்த்த சோதனைகள் மேற்கொள்ளப்படும். இந்த கட்டம் தடுப்பூசி போடப்பட்ட குழுவின் மாற்றங்களுக்கு (விளைவுகள்) தடுப்பூசி காரணமாக இருக்க முடியுமா அல்லது அவை தற்செயலாக நிகழ்ந்ததா என்பதை தீர்மானிப்பதற்காக பெரும்பாலும் ஒரு கட்டுப்பாட்டு குழு, தடுப்பூசி பெறாத நபர்களை உள்ளடக்கியிருக்கும்.

### கட்டம் 3

இந்த கட்டத்தில், ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுகிறது. 2 ம் கட்ட சோதனைகளைப் போலவே, சில தன்னார்வலர்கள் ஒரு கட்டுப்பாட்டு குழுவில் இருக்கையில், மற்றவர்கள் தடுப்பூசியை பெறுகிறார்கள். இந்த கட்டம் பொதுவாக தடுப்பூசியின் விளைதிறன் மற்றும் பாதுகாப்பை தீர்மானிக்க போதுமான தரவை உருவாக்குகிறது. கட்டம் 3 பரீட்சார்த்த சோதனைகள் ஒவ்வொரு நாட்டிலும் பல இடங்கள் உள்ளடங்கலாக பல நாடுகளில் நடத்தப்படுகின்றதுடன் கண்டுபிடிப்புகள் பலதரப்பட்ட மக்களுக்கு பொருந்தும் என்பதை உறுதிசெய்கின்றன.

### கட்டம் 4 பரீட்சார்த்த சோதனைகள்

கட்டம் 3 பூர்த்தியடைந்ததும், தடுப்பூசிகள் பிராந்திய அல்லது தேசிய ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் மீளாய்வினூடாக செல்கின்றது, அவர்கள் தடுப்பூசி பாதுகாப்பானது மற்றும் சந்தையில் விடுவதற்கு வினைத்திறனாக இருக்கிறதா என்று முடிவு செய்கிறார்கள். மேலதிகமாக, நாட்டிலோ அல்லது பிராந்தியத்தின் தடுப்பு மருந்தேற்றும் திட்டத்திலோ தடுப்பூசி எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை கொள்கைக் குழு தீர்மானிக்கிறது. ஒரு தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டவுடன், அது தயாரிக்கப்பட்டு பரவலாக விநியோகிக்கப்படுகிறது. இருப்பினும், தடுப்பூசிகள் சந்தையில் இருக்கும்போது மற்றும் பயன்படுத்தப்படும்போது கூட, ஏதேனும் பாதகமான விளைவுகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும் வழக்கமான சனத்தொகை அமைப்புகளில் அதன் விளைதிறனை மதிப்பீடு செய்யவும் தொடர்ச்சியான மற்றும் முழுமையான கண்காணிப்பு நடத்தப்படுகிறது. இது சந்தைப்படுத்தலுக்கு பின்னரான கண்காணிப்பு என்று அழைக்கப்படுகிறது.

# குடிப்பரம்பல்/சனத்தொகை நோய் எதிர்ப்பு சக்தி என்றால் என்ன? தடுப்பு மருந்தேற்றலின் அடிப்படையில் இதன் கருத்து யாது?

'குடிப்பரம்பல் நோய் எதிர்ப்பு சக்தி', 'சனத்தொகை நோய் எதிர்ப்பு சக்தி' என்றும் அழைக்கப்படும் இது ஒரு தொற்று நோயிலிருந்து மறைமுக பாதுகாப்பு என்பதுடன் இது ஒரு சனத்தொகை தடுப்பு மருந்தேற்றல் அல்லது முன்னர் ஏற்பட்ட நோய்த்தொற்றின் மூலம் உருவாக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி மூலம் நோய்த்தடுப்புடன் இருக்கும்போது நிகழ்கிறது. இது தேவையற்ற நோய் மற்றும் இறப்புகளுக்கு வழிவகுப்பதால் சனத்தொகையில் எந்தவொரு பிரிவிலும் பரவுவதற்கு அனுமதிப்பதன் மூலம் அல்லாது தடுப்பு மருந்தேற்றலின் மூலம் 'குடிப்பரம்பல் நோய் எதிர்ப்பு சக்தியை' அடைவதனை, WHO ஆதரிக்கிறது.

குடிப்பரம்பல் நோய் எதிர்ப்பு சக்தியை அடைவதற்கு நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட மக்களின் சதவீதம் ஒவ்வொரு நோய்க்குமேற்ப மாறுபடும். எடுத்துக்காட்டாக, அம்மை நோய்க்கு எதிரான மந்தை நோய் எதிர்ப்பு சக்திக்கு சனத்தொகையில் 95% தடுப்பு மருந்தேற்றப்பட வேண்டும் மீதமுள்ள 5% பாதுகாக்கப்படுவர், ஏனெனில் தடுப்பூசி போடப்பட்டவர்களிடையே அம்மை நோய் பரவாது. போலியோவைப் பொறுத்தவரை, பாதிக்கப்படுவோர் சுமார் 80% ஆகும். குடிப்பரம்பல் நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுவதற்கு கொவிட்-19 க்கு எதிராக தடுப்பூசி போட வேண்டிய சனத்தொகையின் விகிதம் இன்னும் அறியப்படவில்லை. இது ஆராய்ச்சியின் முக்கியமான பகுதியாகும் என்பதுடன் இது சமுதாயம், தடுப்பூசி, தடுப்பூசிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட சனத்தொகை மற்றும் பிற காரணிகளைப் பொறுத்து மாறுபடும்.

கொவிட்-19 க்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி பற்றி நாங்கள் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறோம். கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் முதல் சில வாரங்களுக்குள் நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறார்கள், ஆனால் அந்த நோயெதிர்ப்பு எவ்வளவு வலிமையானது அல்லது நீடித்தது அல்லது வெவ்வேறு நபர்களுக்கு இது எவ்வாறு மாறுபடுகிறது என்பது எங்களுக்குத் தெரியாது. கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டாவது முறையாக தொற்றுக்குள்ளானதாகவும் செய்திகள் வந்துள்ளன. கொவிட்-19 நோயையும் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியையும் நாம் நன்கு புரிந்துகொள்ளும் வரை, சனத்தொகையில் எந்த விகிதத்தில் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது என்பதையும், அந்த நோய் எதிர்ப்பு சக்தி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையும் அறிய முடியாது, எதிர்கால கணிப்புக்கள் ஒருபுறம் இருக்கட்டும். இந்த சவால்களால் மக்கள் தொற்றுநோய்க்களாவதை அனுமதிப்பதன் மூலம் சனத்தொகையில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க முயற்சிக்கும் எந்தவொரு திட்டத்தையும் தவிர்க்க வேண்டும்.

# கொவிட்-19 தடுப்பூசிகளின் பின்னணி



## பாரம்பரிய தடுப்பூசி உருவாக்கத்திற்கும் மற்றும் கொவிட்-19 தடுப்பூசி உருவாக்கத்திற்கும் என்ன வித்தியாசம்?

கொவிட்-19 தடுப்பூசிகளை உருவாக்கும் செயன்முறை மிக உயர்ந்த தரத்தை பேணும் அதேவேளையில் விரைவாக மேற்கொள்ளப்பட்டது. கொவிட்-19 தடுப்பூசி உருவாக்கத்திற்கும் மற்றைய தடுப்பூசிகளுக்குப் பயன்படும் அதே படிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. பாரம்பரிய தடுப்பூசி உருவாக்கம் ஒழுங்கிலுள்ள ஒவ்வொரு படிமுறையையும் பின்பற்றுகிறது கொவிட்-19 தடுப்பூசிகளுக்கான, செயன்முறையை துரிதப்படுத்த ஒரே நேரத்தில் பல படிமுறைகளை செய்வது பாதுகாப்பாக இருக்கும் என்று கருதும்போது அவ்வாறு மேற்கொள்ளப்பட்டன. மேலதிகமாக, கொவிட்-19 தடுப்பூசி முன்னெப்போதுமில்லாத வகையில் கவனத்தையும் நிதியையும் பெற்றதால், நிதியை பெறுவதற்கு ஆராய்ச்சி குழுக்கள் சிகிச்சைக் கட்டங்களுக்கு இடையில் பல மாதங்கள் இடைநிறுத்தப்பட வேண்டியதில்லை. கொவிட்-19 தடுப்பூசிகள் விரைவாக உருவாக்கப்பட்டு வருகின்றன என்றாலும், அனைத்து அத்தியாவசிய நடவடிக்கைகளும் பின்பற்றப்படுகின்றதுடன் வழமையான பாதுகாப்பு மற்றும் விளைத்திறனான கண்காணிப்பு வழிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன.

## பல்வேறு வகையான கொவிட்-19 தடுப்பூசிகள் யாவை?

வைரஸ்களுக்கு எதிரான தடுப்பூசிகள் ஒரு உயிர்ப்பான பலவீனமான வைரஸ், செயற்திறனற்ற வைரஸ், வைரஸ் காவிகள், புரத துணைஅலகுகள் அல்லது RNA மற்றும் DNA போன்ற நியூக்ளிக் அமிலப் பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படலாம்.

**பின்வரும் வகை கொவிட்-19 தடுப்பூசிகள் 10 ஜனவரி 2021 வரை 3 ஆம் கட்ட பரீட்சார்த்த சோதனைகளில் இருந்தன:**

| தடுப்பூசி வகைகளின் அடிப்படை | தற்போது பரீட்சார்த்த சோதனைக்கு உட்பட்ட சில கொவிட்-19 தடுப்பூசிகள |
|---|---|
| **செயற்திறனற்றவை**<br><br>செயற்திறனற்ற தடுப்பூசிகள் ஒரு பாக்டீரியம் அல்லது வைரஸை வளர்க்கப்பட்டு, பின்னர் அவை வெப்பம், இரசாயனங்கள் அல்லது கதிர்வீச்சால் செயலிழக்கச் செய்யப்படுகின்றன. செயற்திறனற்ற தடுப்பூசிகளில் அவை உயிருடன் இல்லை என்பதுடன் இரட்டிப்படைய முடியாது, ஆனால் அவை இன்னமும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தூ ண்டுகின்றன.<br><br>வைரஸ் அழிக்கப்பட்டுவிட்டதால், அது கலங்களைப் பாதிக்க முடியாது, எனவே செயற்திறனற்ற தடுப்பூசிகளை தாங்கக்கூடிய நிர்ப்பீடனத் தொகுதி உள்ளவர்களுக்கு வழங்க முடியும். | • சினோவக்<br>• வுஹான் உயிரியல் நிறுவன தயாரிப்புக்கள்/சினோபார்ம்<br>• பெய்ஜிங் உயிரியல் நிறுவன தயாரிப்புகள்/சினோபார்ம்<br>• பாரத் பயோடெக், ICMR, தேசிய வைராலஜி நிறுவனம் |

| | |
|---|---|
| **இரட்டிப்படையாத வைரஸ் காவிகள்**<br><br>வைரஸ் காவிகளை அடிப்படையாகக் கொண்ட தடுப்பூசிகள் பெரும்பாலான வழக்கமான தடுப்பூசிகளிலிருந்து வேறுபடுகின்றன, ஏனெனில் அவை பிறபொருட்களை கொண்டிருக்கவில்லை, மாறாக அவற்றை உருவாக்குவதற்கு உடலின் சொந்த கலங்களைப் பயன்படுத்துகின்றன. அவை பிறபொருளை உருவாக்க கலங்களுக்கு அறிவுறுத்தி மரபணு குறியீட்டை வழங்குவதற்கு மாற்றியமைக்கப்பட்ட வைரஸை (காவி) பயன்படுத்துவதன் மூலம் இதைச் செய்கிறார்கள். பின்னர் இது நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டுகிறது. கொவிட்-19 ஐப் பொறுத்தவரை, இது பொதுவாக வைரஸ் ஸ்பைக் புரத மரபணுவாகும், இது ஸ்பைக் புரதங்களின் பிரதிகளை உருவாக்க கலங்களுக்கு அறிவுறுத்துகிறது, இது நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டுவதற்காக உடலால் பிறபொருளாக கருதப்படுகிறது. மாற்றியமைக்கப்பட்ட வைரஸ் காவிகள் உடலுக்குள் இரட்டிப்படைய முடியாது.<br><br>வைரஸ் காவி தடுப்பூசிகள் இயற்கை வைரஸ் தொற்றைப் பிரதிபலிக்கின்றதுடன் வலுவான நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டும். இருப்பினும், மக்கள் ஏற்கனவே வைரஸ்களுக்கு ஆளாகியிருக்க வாய்ப்பு இருப்பதால், சிலர் அதற்கு நோய் எதிர்ப்பு சக்தியுடன் இருக்கலாம், இதனால் தடுப்பூசி குறைவான வினைத்திறன் கொண்டதாக இருக்கும் | • ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்/அஸ்ட்ரஷெனெகா (ஆக்ஸ்போர்டு அஸ்ட்ரஷெனேகா)<br>• கன்சினோ உயிரியல் Inc. /பெய்ஜிங் உயிர்தொழில்நுட்பவியல் நிறுவனம்<br>• கமலேயா ஆராய்ச்சி நிறுவனம் (ஸ்புட்னிக் V) |
| **புரத துணைஅலகுகள்**<br><br>நோயெதிர்ப்பு சக்தியை தூண்டுவதற்கு முழு கிருமியை உட்செலுத்துவதற்குப் பதிலாக, துணையலகு தடுப்பூசிகளில் (சில நேரங்களில் கலமற்ற தடுப்பூசிகள் என்றும் அழைக்கப்படுகின்றன) நோயெதிர்ப்பு சக்தியை தூண்டும் திறனுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கிருமியின் சுத்திகரிக்கப்பட்ட துண்டுகள் உள்ளன. இந்த துண்டுகள் நோயை ஏற்படுத்த இயலாது என்பதால், துணைஅலகு தடுப்பூசிகள் குறைந்தபட்ச பக்க விளைவுகளுடன் மிகவும் பாதுகாப்பானதாக கருதப்படுகின்றன. இந்த தடுப்பூசிகளுக்கு நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் பேணவும் உதவும் பதார்த்தங்கள் மற்றும் / அல்லது ஊக்கமூட்டிகள் பெரும்பாலும் தேவைப்படுகின்றன. | • ஜான்சன் மருந்துக் கம்பனிகள், நொவெக்ஸ்<br>• Anhui Zhifei Longcom Biopharmaceutical/Institute of Microbiology, Chinese Academy of Sciences |
| **வைரஸ் போன்ற துணிக்கைகள்**<br><br>வைரஸ் போன்ற துணிக்கைகள் வைரஸ்களைப் பிரதிபலிக்கும் மூலக்கூறுகளாகும், ஆனால் அவை தொற்றக்கூடியவையல்ல. மனித பப்பிலோமா வைரஸ் (HPV) மற்றும் ஹெபடிடிஸ் பி போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பூசிகளை உருவாக்குவதற்கான மிக விளைதிறனான வழிமுறையாகும். | • Medicago Inc. |

## நியூக்ளிக் அமிலம் அல்லது mRNA

நியூக்ளிக்கமில தடுப்பூசிகள் நோயெதிர்ப்பு சக்தியைத் தூண்டுவதற்கு நோயை உருவாக்கும் கிருமியிலிருந்து (ஒரு வைரஸ் அல்லது பாக்டீரியம்) மரபணுப் பொருளைப் பயன்படுத்துகின்றன. தடுப்பூசியைப் பொறுத்து, மரபணு பொருள் DNA அல்லது RNA ஆக இருக்கலாம்
இரண்டு சந்தர்ப்பங்களிலும், இது கிருமியிலிருந்து ஒரு குறிப்பிட்ட புரதத்தை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குகிறது, இது நிர்ப்பீடன தொகுதியால் பிறபொருளாக (ஒரு பிறபொருள்) அங்கீகரிக்கப்படும். கொவிட்-19 mRNA தடுப்பூசிகள் "ஸ்பைக் புரதம்" என்று அழைக்கப்படும் பாதிப்பில்லாத ஒரு பகுதியை உருவாக்குவதற்கு எமது கலங்களை அறிவுறுத்துகின்றன. கொவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸின் மேற்பரப்பில் ஸ்பைக் புரதம் காணப்படுகிறது.

இது மனிதர்களால் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டைக் கொண்ட ஒப்பீட்டளவில் புதிய தொழில்நுட்பமாகும். உயிர்ப்பான கூறுகள் இல்லாததால், நோயைத் தூ ண்டும் ஆபத்து இல்லை பிறபொருள் நமது சொந்த கலங்களுக்குள்ளும் அதிக அளவிலும் உற்பத்தி செய்யப்படுவதால், நோயெதிர்ப்பு சக்தி வலுவாக இருக்க வேண்டும். mRNA தடுப்பூசிகளுக்கு தீவிர குளிரான சேமிப்பு தேவைப்படுகிறது Pfizer BioNTech -60°C முதல் -80°C வரையிலும், Moderna -20°C யிலும் சேமிக்கப்பட வேண்டும் இது சேமித்தல் மற்றும் விநியோகித்தலில் சவால்களை உண்டாக்குகிறது.

- Pfizer-BioNTech
- Moderna
- CureVac
- Zylus
- Inovio
- AnGes

தடுப்பூசி பரீட்சார்த்த சோதனைகள் குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவலுக்கு, பின்வரும் இணைப்புகளைப் பயன்படுத்தவும்

**உலக சுகாதார அமைப்பு**

https://www.who.int/publications/m/item/draft-landscape-of-COVID-19-candidate-vaccines

**சுகாதாரம் மற்றும் அயன மண்டல மருத்துவத்திற்கான லண்டன் பாடசாலை:**

https://vac-lshtm.shinyapps.io/ncov_vaccine_landscape/

## எத்தனை வகையான கொவிட்-19 தடுப்பூசிகள் 3ம் கட்ட பரீட்சார்த்த சோதனைகளை நிறைவு செய்துள்ளன? அவை எந்த தடுப்பூசிகள்?

கட்டம் 3 பரீட்சார்த்த சோதனைகளில் (20 ஜனவரி, 2021 வரை) பத்தொன்பது கொவிட்-19 தடுப்பூசிகளில், ஆறு தடுப்பூசிகள் கட்டம் 3 சோதனைகளை நிறைவு செய்துள்ளதுடன் விளைதிறன் தொடர்பான முடிவுகளுடன் WHO க்கு ஆவணங்களை சமர்ப்பித்தன.

தற்போது கட்டம் 3 பரீட்சார்த்த சோதனைகளை முடித்த ஆறு கொவிட்-19 தடுப்பூசிகளாவன /பைசர்-பயோஎன்டெக், மொடர்னா, ஆக்ஸ்போர்டு அஸ்ட்ராஷெனிகா, ஸ்பூட்னிக் V, சினோபார்ம் மற்றும் சினோவக்.

ஆறு தயாரிப்புகளிலிருந்தும் WHO விளைத்திறன் முடிவுகளைப் பெற்றுள்ளது இருப்பினும், இரண்டு மட்டுமே சக நிபுணர்களின் மீளாய்வில் விளைத்திறனான முடிவுகளை பெற்றுள்ளன. (லான்செட் மூலமாக ஆக்ஸ்போர்டு அஸ்ட்ராஷெனிகா, மற்றும் புதிய இங்கிலாந்து மருத்துவ இதழ் மூலமாக/பைசர்-பயோஎன்டெக்)

**WHO இலிருந்து புதுப்பிக்கப்பட்ட தகவல்களை இங்கே காணலாம்:**
https://www.who.int/publications/m/item/draft-landscape-of-COVID-19-candidate-vaccines.

## கொவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் உயர்தரமானவையா?

தடுப்பூசிகளின் பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதிப்படுத்துவது WHO இன் மிக உயர்ந்த முன்னுரிமைகளில் ஒன்றாகும். கொவிட்-19 தடுப்பூசிகள் விரைவாக உருவாக்கப்பட்டு வருகின்றன என்றாலும், அனைத்து அத்தியாவசிய நடவடிக்கைகளும் பின்பற்றப்படுகின்றதுடன் வழக்கமான பாதுகாப்பு மற்றும் விளைதிறன் கண்காணிப்பு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. உலகளாவிய விதிமுறைகள் மற்றும் தரநிலைகள் உருவாக்கப்பட்டு தங்கள் தேசிய ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் மூலம் தடுப்பூசிகளின் தரம், பாதுகாப்பு மற்றும் விளைதிறனை மதிப்பிடுவதற்காக செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்ய WHO தேசிய நிறுவனங்களுடன் நெருக்கமாக செயற்படுகிறது.

## நியூக்ளிக்கமிலம் அல்லது mRNA தடுப்பூசிகள் பாதுகாப்பானவையா?

mRNA என்பது தடுப்பூசிகளுக்கான ஒரு புதிய தளமாகும், எனவே, மனிதர்களில் அதன் பயன்பாடு குறித்த வரையறுக்கப்பட்ட சான்றுகளே உள்ளன. இருப்பினும், இது மற்ற தளங்களை விட குறைவான பாதுகாப்புடையது என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. எவ்வாறாயினும், தற்போதுள்ள பிற தளங்களை விட இது ஏன் பாதுகாப்பாக இருக்கக்கூடும் என்பதற்கு தத்துவார்த்த காரணங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, பலவீனமான வைரஸ்களைப் பயன்படுத்தும் தடுப்பூசிகள், வைரஸ் ஆபத்தான வடிவத்திற்குத் திரும்புவதற்கு குறைந்தளவிலான ஆபத்தை கொண்டிருக்கின்றன் எந்த வைரஸும் பயன்படுத்தப்படாததால் mRNA தடுப்பூசிகளிற்கு இது பிரச்சினை அல்ல.

இந்த வகை தடுப்பூசி நமது DNA அல்லது மரபணு குறியீட்டை பாதிக்கும் என்ற தவறான தகவல்களை பரப்புவது கவலையை ஏற்படுத்தியுள்ளது. தெளிவுபடுத்துவதற்காக, RNA இனை மீண்டும் DNA வாக மாற்றுவதற்கான பொறிமுறை மனிதர்களிடம் இல்லாததால், mRNA தடுப்பூசிகளால் மனித மரபணு அமைப்பு அல்லது குறியீட்டில் தலையிட முடியாது.

## தீவிர குளிர் சங்கிலி தடுப்பூசிகள் என்றால் என்ன? பயன்பாட்டின் அடிப்படையில் அதன் அர்த்தம் யாது?

சில கொவிட்-19 தடுப்பூசிகள் மிகவும் குளிரான வெப்பநிலையில் சேமிக்கப்பட வேண்டும், இதற்கு சிறப்பு உபகரணங்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாக, mRNA தடுப்பூசிகளுக்கு தீவிர குளிர் சேமிப்பு தேவைப்படுகிறது Pfizer BioNTech -60°C முதல் -80°C வரையிலும், Moderna -20°C யிலும் சேமிக்கப்பட வேண்டும்.

இது பல நாடுகளுக்கு ஒரு சவாலாகும் இருப்பினும், தேவையான வெப்பநிலையை பராமரிக்கும் உறைகுளிஷரூட்டிகள், "ஆர்க்டெக்ஸ்" (விசேட கொண்டுசெல்லல் கொள்கலன்கள்) மற்றும் உலர்ந்த பனி (dry ice) உள்ளிட்ட ஏற்கனவேயுள்ள தொழில்நுட்பங்கள் தீவிர குளிர் சங்கிலி தடுப்பூசிகளுக்கு உதவக்கூடும். குறிப்பாக, /பைசர் அதன் தடுப்பூசிக்கான வெப்பக் காப்பானை உருவாக்கியுள்ளதுடன் இதில் தடுப்பூசியைத் திறக்காமல் வைத்திருந்தால் 10-15 நாட்கள் வைத்திருக்க முடியும். கலப்பதற்கு முன், இதை 2°C முதல் 8°C வரையிலான வெப்பநிலையில் ஐந்து நாட்கள் வரை குளிர்சாதன பெட்டியில் வைக்கலாம்.

## கொவிட்-19 தடுப்பூசிகள் நீண்டகால நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குகின்றனவா?

இவை புதிய தடுப்பூசிகள் என்பதால், அவை கொவிட்-19 க்கு எதிராக நீண்டகால நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குமா என்பது எங்களுக்கு இன்னும் தெரியவில்லை.

## கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்?

பல கொவிட்-19 தடுப்பூசிகள் அதிக அளவு விளைத்திறனைக் கொண்டிருப்பதாகத் தோன்றினாலும், எந்த தடுப்பூசியும் 100% பாதுகாப்பாக இல்லை. ஆகையால், ஒரு சிறிய சதவீத மக்கள், அவர்களின் மரபணு மற்றும் / அல்லது உயிரியல் இயல்புகள் காரணமாக, கொவிட்-19 தடுப்பூசி பெற்ற பிறகு எதிர்பார்த்தபடி நிர்ப்பீடனத்தை உருவாக்க மாட்டார்கள்.

ஒரு தடுப்பூசியின் குறிப்பிட்ட இயல்புகளுக்கு மேலதிகமாக, ஒரு நபரின் வயது, அடிப்படை சுகாதார நிலைமைகள் அல்லது கொவிட்-19 நோய்த்தொற்றுக்கான முன்னரான தொற்று போன்ற பல காரணிகள் அவர்கள் கொவிட்-19 இலிருந்து எந்த அளவிற்கு பாதுகாக்கப்படுவார்கள் என்பதனை தீர்மானிக்கும். வழக்கமான பயன்பாட்டு அமைப்புகளில் தடுப்பூசியின் விளைதிறனை தொடர்ந்து மதிப்பீடு செய்வது இந்த தடுப்பூசிகளின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் மிகவும் பயனுள்ள தடுப்பூசியை உருவாக்குவதற்கும் முக்கியமானதாகும். இந்த செயன்முறை தடுப்பூசி உருவாக்கத்தின் சுழற்சியின் ஒரு சாதாரண பகுதியாகும் என்பதுடன் தடுப்பூசிகளையும் அவற்றின் பயன்பாட்டையும் தொடர்ந்து மேம்படுத்துகிறோம் என்றும் உறுதியளிக்கிறது.

## ஒரு நபர் தடுப்பூசி மூலம் கொவிட்-19 ஐப் பெற முடியுமா?

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகள் அல்லது தற்போது உருவாக்கப்பட்டுக் கொண்டுள்ள கொவிட்-19 தடுப்பூசிகள் எதுவும் கொவிட்-19 ஐ ஏற்படுத்தும் நேரடி வைரஸைக் கொண்டிருக்கவில்லை. இதன் பொருள் ஒரு கொவிட்-19 தடுப்பூசி நோயை ஏற்படுத்தாது என்பதாகும்.

உருவாக்கத்தில் பல்வேறு வகையான தடுப்பூசிகள் உள்ளன. அனைத்து தடுப்பூசிகளும் கொவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸை எவ்வாறு கண்டறிந்து போராட வேண்டும் என்பதை நமது நிர்ப்பீடன தொகுதிக்கு கற்பிக்கின்றன. சில நேரங்களில் இந்த செயன்முறை காய்ச்சல் போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தும். இந்த அறிகுறிகள் இயல்பானவை மற்றும் கொவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸிற்கு எதிராக உடல் நிர்ப்பீடனத்தை உருவாக்குகிறது என்பதற்கான அறிகுறியாகும்.

## கொவிட்-19 தடுப்பூசி பெற்ற ஒருவர் கொவிட்-19 ஐப் பெற முடியுமா?

தடுப்பு மருந்தேற்றலுக்கு பிறகு உடல் நோய் எதிர்ப்பு சக்தியை (கொவிட்-19 நோயை ஏற்படுத்தும் வைரஸிற்கு எதிரான நிர்ப்பீடனத்தை) உருவாக்க சில வாரங்கள் ஆகும். அதாவது, ஒரு நபர் தடுப்பூசிக்கு சற்று முன்னதாகவோ அல்லது அதற்குப் பின்னரோ கொவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸால் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்பட முடியும். தடுப்பூசியினால் பாதுகாப்பை வழங்குவதற்கு போதுமான காலஅவகாசம் இல்லை என்பதே இதற்குக் காரணமேயன்றி தடுப்பூசி பயனற்றதாக இருந்தமையல்ல. மேலும், எந்தவொரு தடுப்பூசியும் 100% விளைதிறன் கொண்டதாக இருக்காது என்பதால், கொவிட்-19 தடுப்பூசி போடப்பட்ட சில நபர்கள் நோய்க்கு எதிராக போதுமான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக் கொள்ளாததுடன், நோய்வாய்ப்படக்கூடிய அபாயத்திலும் இருப்பார்கள்.

## ஒரு நபர் ஏற்கனவே கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டு வந்த பின்னும், அவர்கள் கொவிட்-19 தடுப்பூசியை பெற வேண்டுமா?

கொவிட்-19 உடன் தொடர்புடைய கடுமையான உடல்நல அபாயங்கள் மற்றும் கொவிட்-19 இனுடைய மீள்தொற்றுக்கான சாத்தியம் இருப்பதால், ஏற்கனவே கொவிட்-19 இருந்ததா என்பதைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும். தடுப்பூசி பற்றி முடிவெடுக்கும் நோக்கத்திற்காக முன் தொற்றுநோய்க்கான வைரஸ் அல்லது பிறபொருளெதிரியை அறிவதற்கான குருதிப்பரிசோதனை பரிந்துரைக்கப்படவில்லை.

இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி எனப்படும் தொற்றுநோயால் ஒருவர் பெறும் நோய் எதிர்ப்பு சக்தி நபருக்கு நபர் மாறுபடும். இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தடுப்பூசியால் தூண்டப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி ஆகிய இரண்டும் வல்லுநர்கள் மேலும் அறிய முயற்சிக்கின்ற கொவிட்-19 இன் முக்கிய அம்சங்களாகும். இந்த நேரத்தில், உங்களிற்கு கொவிட்-19 இருந்ததா இல்லையா என்பதை விடுத்து, பொது இடங்களில் முக்கவசத்தை அணிவது, மற்றவர்களிடமிருந்து குறைந்தது ஆறு அடி தூரத்தில் இருப்பது, அடிக்கடி உங்கள் கைகளை சவர்க்காரம் மற்றும் தண்ணீரில் குறைந்தது 20 விநாடிகள் கழுவுதல், கூட்டங்கள் மற்றும் அடைக்கப்பட்ட இடங்களைத் தவிர்த்தல் என்பன தொற்றுநோயைத் தடுப்பதற்கான சிறந்த வழிகளாகும்.

## கொவிட்-19 தடுப்பூசிகள் கொவிட்-19 இன் பல்வேறு திரிபுகளிலிருந்தும் பாதுகாக்கிறதா?

SARS-CoV-2 வைரஸில் அறிக்கையிடப்பட்ட மாற்றங்களை WHO உன்னிப்பாகக் கண்காணிக்கிறது. இந்த வைரஸ், மற்ற வைரஸ்களைப் போலவே, காலப்போக்கில் தொடர்ந்து மாறுகிறது. இந்த மாற்றங்கள் மற்றும் நோயறிதல், சிகிச்சை மற்றும் தடுப்பூசிகளின் தாக்கத்தை கண்காணிப்பது முக்கியமானதாகும். தற்போது நாம் அறிந்திருப்பது என்னவென்றால், தற்போது கிடைத்துள்ள மற்றும் உருவாக்கப்பட்டுக்கொண்டுள்ள தடுப்பூசிகள் இதுவரை அறிக்கையிடப்பட்டுள்ள SARS-CoV-2 இன் பல்வேறு வடிவங்களுக்கு எதிராக பாதுகாப்பை வழங்க வேண்டும். ஏனென்றால், இந்த தடுப்பூசிகள் ஒரு பரந்த நோயெதிர்ப்பு சக்தியையும், பிறபொருளெதிரியை உருவாக்கும் தன்மையையும் மற்றும் கலங்களிலிருந்தான நிர்ப்பீடனத்தையும் வெளிப்படுத்துகின்றன. வைரஸ் பரிணாமத்தையும் அதன் சாத்தியமான தாக்கத்தையும் நாம் தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டும்.

## கொவிட்-19 தடுப்பூசிகளிலிருந்து பக்க விளைவுகள் உண்டா?

எந்தவொரு மருந்து அல்லது தடுப்பூசியைப் போலவே, கொவிட்-19 தடுப்பூசிகளும் காய்ச்சல், தலைவலி, சோர்வு, தசை வலி மற்றும் / அல்லது ஊசி போடும் இடத்தில் வலி அல்லது சிவத்தல் போன்ற இலேசான பக்க விளைவுகளை ஏற்படுத்தும். இலேசான இவ்விளைவுகள் சில நாட்களுக்குள் தானாகவே போய்விடும். கடுமையான அல்லது நீண்டகால பக்க விளைவுகள் மிகவும் அரிதானவை. அரிதான பாதகமான விளைவுகளைக் கண்டறிவதற்கும் பாதுகாப்பிற்காகவும் தடுப்பூசிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. ஒரு தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, எந்தவொரு எதிர்பாராத பாதகமான பக்க விளைவுகளையும் கண்டறிவதற்கும், அதிக எண்ணிக்கையிலான மக்களிடையே விளைதிறனை மேலும் மதிப்பிடுவதற்கும், பாரிய பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக தடுப்பூசியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தொடர்ந்து மதிப்பிடுவதற்கும் நெருக்கமான கண்காணிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது. எனவே, தடுப்பூசி பெறுபவர்கள் எந்தவொரு எதிர்கொள்ளப்பட்ட பக்க விளைவுகள் அல்லது பாதகமான நிகழ்வுகள் குறித்து நியமிக்கப்பட்ட சுகாதார நிறுவனங்களுக்கு தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

## ஒரு தடுப்பூசிக்கு ஈடாக மற்றொரு தடுப்பூசியை மாற்றி வழங்க முடியுமா?

தற்போதுள்ள, கொவிட்-19 தடுப்பூசி அடிப்படைகளில் ஒரு தடுப்பூசிக்கு ஈடாக மற்றொரு தடுப்பூசி மாற்றி வழங்குவதற்கான தரவு எதுவும் கிடைக்கவில்லை. இரண்டு தடவைகளுக்கும் ஒரே தயாரிப்பு பயன்படுத்தப்பட வேண்டும் என்று WHO தற்போது பரிந்துரைக்கிறது. இரண்டு தடவைகளிலும் வெவ்வேறு கொவிட்-19 தடுப்பூசி தயாரிப்புகள் தவறுதலாக வழங்கப்பட்டால், அந்த நேரத்தில் எந்த தடுப்பூசியினதும் மேலதிக அளவு பரிந்துரைக்கப்படவில்லை. மேலும் தகவல்கள் கிடைக்கும்போது பரிந்துரைகள் புதுப்பிக்கப்படலாம்.

# கொவிட்-19 தடுப்பூசிக்கான அனுமதி



## கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டு பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றன?

ஒழுங்குபடுத்தல் நிறுவன அனுமதி மற்றும் முழுமையான தரக் கட்டுப்பாட்டுக்குப் பின்னர்தான் ஒரு தடுப்பூசி தேசிய சுகாதாரபராமரிப்பு அமைப்புகளினுள் அறிமுகப்படுத்தப்படுகிறது. ஒரு தடுப்பூசி உருவாக்கப்பட்ட விதம், உற்பத்தி மற்றும் சிகிச்சை சோதனை நடைமுறைகளுக்கு உட்பட்டதும், பாதுகாப்பான, விளைதிறன் மிக்கதாகவும், சிறப்பான உற்பத்தித் தரங்களிலிருப்பது நி'ரூபிக்கப்பட்டவுடன், உற்பத்தியாளர்கள் பயன்பாட்டை அங்கீகரிப்பதற்காக ஒழுங்குபடுத்துனர்களால் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய தரவை சமர்ப்பிக்க வேண்டும்.

உற்பத்தியாளர்கள் அங்கீகாரம் அல்லது தயாரிப்புக்கான உரிமத்தைப் பெறுவதற்குத் தேவையான தரவு இருப்பதாக நம்பினால், அவர்கள் தங்கள் தயாரிப்புகளை மதிப்பீடு செய்ய ஒரு தேசிய ஒழுங்குபடுத்தல் அமைப்பு, கடுமையான தரங்களை ஒழுங்குபடுத்தல் அமைப்பு அல்லது தேவையான முன்தராதரத்தை உறுதிப்படுத்தும் செயன்முறைக்காக WHOவிற்க்கு அல்லது WHOவின் அவசரகால பயன்பாட்டிற்காக பட்டியலிடும் செயன்முறைக்கு (EUL) சமர்ப்பிக்கலாம். ஒரு கடுமையான தரங்களை ஒழுங்குபடுத்தல் அமைப்பு (SRA) என்பது ஒரு தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையாகும், இது சந்தைப்படுத்தல் அங்கீகாரத்திற்கான மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை ஒழுங்குபடுத்தும் செயல்முறையில் தரம், பாதுகாப்பு மற்றும் விளைதிறன் ஆகியவற்றிற்கான கடுமையான தரங்களை அமுல்படுத்துவதாக WHO இனால் கருதப்படுகிறது. WHOவின் EUL அல்லது தேவையான தராதரம் என்பதை பொறுத்தே யுனிசெ.'.ப் மற்றும் PAHO போன்ற கொள்வனவுப் பங்காளர்கள் மற்றும் Gavi மூலமான நிதியளிப்பு தடுப்பூசிகளுக்கு வழங்கப்படுவதற்கான ஒரு முன்வேண்டுகோளாகும்.

## அவசரகால பயன்பாட்டிற்காக பட்டியலிடும் செயன்முறை (EUL) என்றால் என்ன?

WHO அவசரகால பயன்பாட்டிற்காக பட்டியலிடல் (EUL) செயன்முறை பொது சுகாதார அவசர கால நிலைமைகளில் அத்தியாவசியமான சுகாதார தயாரிப்புகளின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுகிறது. பாதுகாப்பு, விளைதிறன் மற்றும் தரம் ஆகியவற்றின் கடுமையான நியதிகளைக் கடைப்பிடிக்கும் போது, அவசரநிலைக்கு தீர்வு காண மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் நோயறிதல்களை விரைவில் கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். இந்த மதிப்பீடு சுகாதார அவசரநிலைமையால் ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் சாத்தியமான அபாயங்களுக்கு எதிராக முன்மொழியப்பட்ட தயாரிப்புக்களின் நன்மைகளை எடைபோடுகிறது.

EUL பாதையில் பிந்திய கட்டம் 2 மற்றும் கட்டம் 3 பரீட்சார்த்த சிகிச்சை சோதனை தரவு மற்றும் பாதுகாப்பு, விளைதிறன், தரம் மற்றும் இடர் முகாமைத்துவம் குறித்த கணிசமான கூடுதல் தரவு ஆகியவை அடங்கும். தரவுகளை WHO அதிகாரிகள் அல்லாத சுயாதீன வல்லுநர்கள் மீளாய்வு செய்கிறார்கள்.

EUL மீளாய்வில் பங்கேற்க தனிப்பட்ட தேசிய நிறுவனங்களின் நிபுணர்கள் அழைக்கப்படுகிறார்கள். WHO அவசரகால பயன்பாட்டிற்காக ஒரு தடுப்பூசி பட்டியலிடப்பட்டவுடன், WHO அதன் பிராந்திய ஒழுங்குபடுத்தல் வலையமைப்பு மற்றும் பங்காளர்களுடன் இணைந்து தேசிய சுகாதார நிறுவனங்களுக்கு தடுப்பூசி மற்றும் மருத்துவ ஆய்வுகளிலிருந்து தற்போது வரையான தரவுகளின் அடிப்படையில் அதன் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் குறித்து தெரிவிக்கிறது.

## எந்த கொவிட்-19 தடுப்பூசிகளுக்கு EUL வழங்கப்பட்டுள்ளது?

தற்போது, ஃபைசர்-பயோஎன்டெக் தடுப்பூசிக்கு WHOவின் EUL வழங்கப்பட்டுள்ளது. மாடர்னா மற்றும் ஆக்ஸ்போர்டு அஸ்ரா'ஜெனெகா தடுப்பூசிகளுக்கான ஆவணங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன, மேலும் மற்றயவை (கமலேயா, சினோபார்ம், சினோவக், ஜான்சென், மற்றும் இந்திய சீரம் நிறுவனம்) WHO இற்கு தரவு சமர்ப்பிப்பதற்கான WHOவின் தராதரத்தை உறுதிப்படுத்தும் குழுவுடன் கலந்துரையாடி வருகின்றனர்.

**புதுப்பிக்கப்பட்ட தகவல்களை பின்வரும் இணைப்பில் காணலாம்:**
https://www.who.int/teams/regulation-prequalification/eul/COVID-19

## ஒரு தடுப்பூசிக்கு EUL கிடைத்தவுடன், அதை ஒவ்வொரு நாட்டிலும் பயன்படுத்த முடியுமா?

ஒவ்வொரு நாடும் இறையாண்மை உடையதுடன் அதன் சனத்தொகைக்கு மிகவும் பொருத்தமானது என்று கருதும் கருவிகள் மற்றும் தயாரிப்புகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை கொண்டுள்ளது. இந்த தேர்வு விஞ்ஞானம் மற்றும் நெறிமுறைகளின் மிக உயர்ந்த தரங்களால் வழிநடத்தப்பட வேண்டும். WHO அவசரகால சூழலில் தடுப்பூசிகள் மற்றும் பிற தயாரிப்புகளின் விதிவிலக்கான அங்கீகாரத்தை சுற்றி வழிகாட்டுதலைக் கொண்டுள்ளது. எனவே, WHOவின் EUL உடன் கூட, அனைத்து தடுப்பூசிகளும் பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் பிராந்திய அல்லது தேசிய ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.

# கொவிட்-19 தடுப்பூசி விநியோகம்

## ACT விரைவாக்கி என்றால் என்ன?

சோதனைகள், மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் போன்ற கொவிட்-19 ற்கான கருவிகளின் நியாயமான மற்றும் சமமான ஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான ஒரே உலகளாவிய கட்டமைப்பாக கொவிட்-19 கருவிகள் அணுகல் விரைவாக்கி (ACT-Accelerator) உள்ளது. இது தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை விரைவுபடுத்துவதற்கு அரசாங்கங்கள், சுகாதார நிறுவனங்கள், விஞ்ஞானிகள், வணிகங்கள், சிவில் சமூகம் மற்றும் நன்கொடையாளர்களை ஒன்றிணைக்கிறது. இது தொற்றுநோய்க்கான ஒன்றிணைந்த, இறுதியான உலகளாவிய தீர்வாக ஏப்ரல் 2020 இல் ஆரம்பிக்கப்பட்டது.

ACT-விரைவாக்கியின் இரண்டு முக்கிய நோக்கங்கள்:

1. புதிய நோயறிதல், சிகிச்சை மற்றும் தடுப்பூசிகளின் உருவாக்கத்தை துரிதப்படுத்துதல்
2. அனைத்து கொவிட்-19 கருவிகளும் உறுப்பு நாடுகளுக்கு சமமான உலகளாவிய அணுகலை அடைதல்

## COVAX வசதிப்படுத்துகை என்றால் என்ன?

COVAX என்பது ACT-விரைவாக்கி இன் தடுப்பூசிக்கான ஆதாரம் ஆகும். COVAX, Gavi, தொற்றுநோய்களுக்கான தயார்நிலை புத்தாக்கங்களுக்கான கூட்டணி (CEPI) மற்றும் WHO இனால் இணைந்து தலைமைதாங்கப்படுகிறது. COVAX ஆனது கொவிட்-19 தடுப்பூசிகளின் உருவாக்கம் மற்றும் உற்பத்தியை விரைவுபடுத்துவதையும் ஒவ்வொரு நாட்டிற்கும் நியாயமான, விரைவான மற்றும் சமமான அணுகலை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தற்போது, சுமார் 190 நாடுகள் மற்றும் பொருளாதாரங்கள் COVAX வசதியிலிருந்து பயனடைகின்றதுடன் இதில் 92 குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் முற்பண சந்தை அர்ப்பணிப்பு (AMC) ஊடான நிதி உதவிக்கு தகுதியானவையாகும். நன்கொடையாளர் நிதியளித்த ஆரம்ப விகிதாசார ஒதுக்கீட்டிற்கேற்ப தடுப்பூசிகள் AMC- தகுதி வாய்ந்த நாடுகளில் "உடனடியாக ஆரம்பித்தல்" அறிமுகங்களாக விநியோகிக்கப்படும். நிதிஆதாரங்கள் தீர்ந்துபோகும் வரை நாடுகள் படிப்படியாக தடுப்பூசிகளைப் பெறும். COVAX ஒவ்வொரு AMC- நாட்டின் சனத்தொகையில் 20% க்கு நன்கொடையாளர் நிதியளித்த தடுப்பூசிகள் பரம்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது் தடுப்பூசி உருவாக்கத்தின் வெற்றி, தடுப்பூசியின் விலை, தடுப்பூசியின் பண்புகள் மற்றும் கிடைக்கக்கூடிய வளங்கள் ஆகியவற்றால் இறுதி ஒதுக்கீடு தீர்மானிக்கப்படும்.

## கொவிட்-19 தடுப்பூசியை முதலில் யார் பெறுவார்கள்?

தடுப்பூசிகள் உலகளாவிய பொதுச் சொத்து: எவர்ஒருவருக்கு தடுப்பூசி போட்டாலும் அனைவரும் நன்மையடைவர். இந்த தடுப்பூசி உலகம் முழுவதும் கிடைப்பது அனைத்து நாடுகளின் ஆர்வத்திலும் உள்ளது. உலகின் அனைத்து பகுதிகளும் தொற்றுப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் உண்மையான உலகளாவிய (பொருளாதாரம் உட்பட) மீட்சி இருக்காது.

தடுப்பூசிகளுக்கு சமமான அணுகலை உறுதி செய்வதற்காக, ஆரம்ப கட்டத்தில் தடுப்பூசிகளின் வழங்கல் மட்டுப்படுத்தப்படும் என்பதால், கொவிட்-19 தொற்றுநோய்களின் போது உருவாக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் சனத்தொகை முன்னுரிமை குறித்த WHO இன் மூலோபாய ஆலோசனைக் குழு நோய்த்தடுப்பு தொடர்பான நிபுணர் குழு (SAGE) கொள்கை பரிந்துரைகளை வெளியிட்டது.

முன்நிலைப் பணியாளர்கள் (சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பிறர்), வயதானவர்கள் மற்றும் பல நோய்கள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு SAGE பரிந்துரைக்கிறது. ஆரம்ப கட்டத்தில் சில குழுக்களை உள்ளடக்குவது நியாயமானதும் மற்றும் அவசரமானதும் என்று உணர்ந்தால், மேலும் அதிக ஆபத்துள்ள குழுக்களை நாடுகள் பரிந்துரைக்க முடியும்.

அதிக ஆபத்துள்ள சுகாதார ஊழியர்களைப் பாதுகாப்பது மூன்றுவித நோக்கங்களைக் கொண்டுள்ளது: (i) தனிப்பட்ட சுகாதாரப் பணியாளர்களைப் பாதுகாத்தல் (ii) கொவிட்-19 பெருந்தொற்றுநோய்களின் போது முக்கிய அத்தியாவசியமான கொவிட்-19 அல்லாத சேவைகளைப் பாதுகாத்தல், மற்றும் (iii) பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு தொடர்ந்து பரவுவதைத் தடுப்பது என்பவையாகும். வயதானவர்களைப் பாதுகாப்பது இறப்பு எண்ணிக்கையைக் குறைப்பதில் பாரிய பொது சுகாதார விளைவை ஏற்படுத்தும்.

கடுமையான கொவிட்-19 நோய் மற்றும் இறப்பு அபாயத்தை அதிகரிப்பதாக சில நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கட்டம் 2 மற்றும் கட்டம் 3 பரீட்சார்த்த சிகிச்சைப் பரிசோதனைகள் பல்வேறு அடிப்படை மருத்துவ நிலைமைகளைக் கொண்ட நபர்களுக்கு தடுப்பூசி ஒரேமாதிரியான பாதுகாப்பு மற்றும் விளைதிறனைக் கொண்டுள்ளது என்பதை நி'ரூபித்துள்ளது. உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், ஆஸ்துமா, நுரையீரல் நோய், கல்லீரல் நோய், சிறுநீரக நோய் மற்றும் நீண்டகால (நிலையான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட) மனித நோயெதிர்ப்பு குறைபாடுள்ள வைரஸ் (HIV), ஹெபடைடிஸ் C வைரஸ் (HCV) மற்றும் / அல்லது ஹெபடைடிஸ் B வைரஸ் (HBV) ஆகிய தொற்றாநோயுள்ளவர்களும் அடங்கும். கடுமையான கொவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டு அதிக ஆபத்திலிருப்பதாக அடையாளம் காணப்பட்ட தொற்றாநோயுள்ள நபர்களுக்கு தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது.

அதிகமான தடுப்பூசி கிடைக்கும்போது, WHO முன்னுரிமை பாதை வரைபடம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி மேலதிக முன்னுரிமை குழுக்களுக்கு தடுப்பூசி போட வேண்டும், இது தேசிய தொற்றுநோயியல் தரவு மற்றும் பிற தொடர்புடைய கருத்தாய்வுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளும்.

## கொவிட்-19 தடுப்பூசியை யார் பெற மாட்டார்கள்?

தடுப்பூசி வகையின் அடிப்படையில் தனிப்பட்ட குணாதிசயங்களின்படி தடுப்பூசி விநியோகத்தில் கட்டுப்பாடுகள் மாறுபடும். இருப்பினும், பின்வரும் குழுக்களில் கொவிட்-19 தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்த வரையறுக்கப்பட்ட அல்லது தரவு இல்லை எனவே, அனைத்து கொவிட்-19 தடுப்பூசிகளும் தற்போது இந்த குழுக்களுக்கு பரிந்துரைக்கப்படவில்லை. இருப்பினும், உருவாகின்ற ஆதாரங்களுடன், இந்த முடிவுகள் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படும்.

- 16 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் மற்றும் இளம் பருவத்தினர் - தற்போது 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் அல்லது இளம் பருவத்தினருக்கான விளைதிறன் அல்லது பாதுகாப்பு தொடர்பாக தரவு எதுவும் இல்லாததால், இந்த நபர்களுக்கு இந்த நேரத்தில் தடுப்பூசி போடக்கூடாது.
- கர்ப்பிணிப் பெண்கள் - கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி போடுவதற்காக கிடைக்கக்கூடிய தகவல்கள் தடுப்பூசி விளைதிறன் அல்லது கர்ப்பத்தில் தடுப்பூசி தொடர்பான அபாயங்களை மதிப்பிடுவதற்கு போதுமானதாக இல்லை. அடுத்துவரும் மாதங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கான மேலதிக ஆய்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின் தரவு கிடைக்கும்போது, தடுப்பூசி குறித்த பரிந்துரைகள் அதற்கேற்ப புதுப்பிக்கப்படும். இடைப்பட்ட காலத்தில், ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு தடுப்பூசி போடுவதன் நன்மை சாத்தியமான தடுப்பூசி அபாயங்களை விட அதிகமாக இருந்தால் அன்றி, அதாவது சுகாதாரப் பணியாளர்கள் அதிகமாக தொற்றிற்கு வெளிக்காட்டப்படுவதை போல மற்றும் பல நோய்களுடைய கர்ப்பிணிப் பெண்கள் கடுமையான கொவிட்-19 க்கான அதிக அளவில் ஆபத்துள்ள குழுவாக இருந்தாலன்றி கர்ப்ப காலத்தில் கொவிட்-19 தடுப்பூசிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று WHO பரிந்துரைக்கிறது.
- தற்போது கடுமையான கொவிட்-19 உடையவர்கள் - SARS-CoV-2ற்கான கடுமையான அறிகுறி உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடுவது அவர்கள் கடுமையான நோயிலிருந்து மீண்டு வரும் வரை மற்றும் தனிமைப்படுத்தப்படுத்தல் காலம் பூர்த்தி செய்யப்படும் வரை ஒத்திவைக்கப்பட வேண்டும். அறிகுறிகள் தொடங்குவதற்கும் தடுப்பூசி போடுவதற்கும் இடையில் குறைந்தபட்ச இடைவெளிக்கான பரிந்துரையை ஆதரிப்பதற்கு தேவையான தரவு இல்லை.

# COVAX மூலம் எந்த தடுப்பூசிகளைப் பெறுவோம்?

COVAX வசதிப்படுத்துகை பங்கேற்பு நாடுகளுக்கு உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பல்வகைமைப்பட்ட தடுப்பூசி வடிவத்திற்கான அணுகலை வழங்கும். WHO ஆல் நிர்ணயிக்கப்பட்ட உலகளாவிய தரத்தை பூர்த்தி செய்யும் எந்தவொரு தடுப்பூசியையும் COVAX பரிசீலிக்கும்.

COVAX வசதிப்படுத்துகை ஆக்ஸ்போர்டு அஸ்ட்ரசெ'னெகா தடுப்பூசிக்காக அஸ்ட்ரசெ'னெகாவுடன் முன்கூட்டிய கொள்வனவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதுடன் ஜான்சன் அண்ட் ஜான்சனுடன் 500 மில்லியன் அளவான ஜான்சென் தடுப்பூசிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது, இது தற்போது ஒரு தடவையில் போடப்படும் தடுப்பூசியாக ஆராயப்படுகிறது. மேலதிகமாக, COVAX சீரம் இந்திய நிறுவனத்துடன் (SII) 200 மில்லியன் அளவுகளுக்கும், மேலும் 900 மில்லியன் அளவு வரை அதிகரிக்கக்கூடியதாக ஆக்ஸ்போர்டு அஸ்ட்ரசெ'னெகா அல்லது நோவாவாக்ஸ் தடுப்பூசிகளுக்கான ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளதுடன் 200 மில்லியன் சனோ.ஃபி / GSK தடுப்பூசியை பெறுவதற்கான நோக்கத்தைக் கொண்டுள்ளது.

COVAX ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வடிவத்தின் ஒரு பகுதியாக, CEPI பத்து தடுப்பூசி உற்பத்தியாளர்களிடம் முதலீடு செய்துள்ளது. இந்த உற்பத்தியாளர்களில் ஒன்பது பேர் இன்னும் உருவாக்கத்தில் உள்ளனர், மேலும் 7 ஜனவரி 2021 நிலவரப்படி ஏழு பேர் பரீட்சார்த்த சிகிச்சை சோதனைகளில் உள்ளனர்.

1. ஆக்ஸ்போர்டு அஸ்ட்செ'னெகா (கட்டம் 3)
2. க்ளோவர் பயோ.ஃபார்மாசூட்டிகல்ஸ், சீனா (கட்டம் 1)
3. க்யூர்வாக், ஜெர்மனி (கட்டம் 2 பி / 3)
4. அமெரிக்காவின் இன்னோவியோ (கட்டம் 2)
5. இன்ஸ்டிட்யூட் பாஸ்டர் / மெர்க் / தெமிஸ், பிரான்ஸ் / அமெரிக்கா / ஆஸ்திரியா (கட்டம் 1)
6. மாடர்னா, அமெரிக்கா (கட்டம் 3)
7. நோவாவக்ஸ், அமெரிக்கா (கட்டம் 3)
8. ளுமு பயோ சயின்ஸ், தென் கொரியா (சிகிச்சைக்கு முந்திய நிலை)
9. ஹாங்காங் பல்கலைக்கழகம், ஹாங்காங் (சிகிச்சைக்கு முந்திய நிலை)
10. குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம் / CSL, ஆஸ்திரேலியா (கட்டம் 1, திட்டம் நிறுத்தப்பட்டது)

# மேலதிக கேள்விகள்



## கொவிட்-19 தடுப்பூசிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன?

தற்போது கிடைக்கக்கூடிய பெரும்பாலான தடுப்பூசிகள் இரண்டு தடவைகளை பரிந்துரைத்துள்ளன. தடுப்பூசிகள் தசைவழியாக ஊசி மூலம் 21-28 நாட்கள் இடைவெளியில் கொடுக்கப்படுகின்றன.

## நாட்டின் தயார்நிலை என்றால் என்ன?

நாட்டின் தயார்நிலை என்பது கொவிட்-19 தடுப்பூசிகளைப் பயன்படுத்துவதற்கான தயார்படுத்தலின் நடைமுறையாகும். தற்போது, WHO, UNICEF, Gavi மற்றும் பிற பங்காளிகள் இணைந்து கொவிட்-19 தடுப்பூசிகளை அறிமுகப்படுத்துவதற்காக நாடுகளை தயார்படுத்த உதவுகிறார்கள்.

தடுப்பூசிக்கான தயார்நிலை மதிப்பீட்டு கருவி (VIRAT) என்பது WHO, யுனிசெப் மற்றும் உலக வங்கியின் நாட்டிற்கான அணிகள் மற்றும் பங்காளர்களின் ஆதரவோடு சுகாதார அமைச்சுகள் மற்றும் நிதி அமைச்சுக்களால் பயன்படுத்தப்பட வேண்டிய தேசிய அளவிலான கருவியாகும். கொவிட்-19 தடுப்பூசி அறிமுகத்திற்கு போதுமான அளவு தயார்படுத்த நிறுவப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை சமிஞ்சை செய்யும் ஒரு திட்டமிடல் வரைபடமாக இந்த கருவி செயல்படுகிறதுடன் முக்கிய மைல்கற்களுக்கு எதிராக தற்போது மற்றும் காலப்போக்கில் பங்கேற்பாளர்கள் தங்கள் தயார்நிலை மற்றும் முன்னேற்றத்தை சுயமாக கண்காணிக்கவும் உதவுகிறது.

கொவிட்-19 தடுப்பூசி வெளியிடுதலுக்கு ஒரு நாட்டின் தயார்நிலையை கண்காணிப்பதற்கு ஒரு தேசிய ஒழுங்குபடுத்தல் மற்றும் தடுப்பூசி திட்டத்தின் (NDVP) உருவாக்கம் ஒரு முன்நிபந்தனையாகும். COVAX இன் நாட்டு தயார்நிலை மற்றும் விநியோக (CRD) பணிநிலையம் கொவிட்-19 தடுப்பூசிகளுக்கு ஒரு NDVP ஐ உருவாக்குவதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது. CRD ஒரு வார்ப்புருவையும் வழங்குகிறது, இது கொவிட்-19 தடுப்பூசி அறிமுகத்திற்கான செயற்பாட்டு திட்டத்தை உருவாக்க நாடுகளுக்கு உதவும்.

## இலங்கைக்கு ஒரே வகையான தடுப்பூசி கிடைக்குமா?

COVAX வசதிப்படுத்துகை பல தடுப்பூசிகளை AMC நாடுகளில் விநியோகிக்க கவனத்திற் கொண்டிருப்பதால், நாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட வகை தடுப்பூசிகளைப் பெறக்கூடும். இலங்கை COVAX வசதிப்படுத்துகையில் AMC உறுப்பினராக சேர்ந்துள்ளது, எனவே இந்த வசதிப்படுத்துகையால் ஒதுக்கப்பட்ட தடுப்பூசிகளால் பயனடைவார்கள். நாட்டின் நிலைமை, தேசிய கொள்கை உருவாக்கும் அமைப்புகளின் வழிகாட்டுதல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான WHO மூலோபாய ஆலோசனைக் குழு நிபுணர்களின் (SAGE) பரிந்துரைகள் மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட அளவுகள் அல்லது தடுப்பூசிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து தேசிய நிறுவனங்களுக்கு தீர்மானிக்கும் சுதந்திரம் உள்ளது.

# கொவிட்-19 தடுப்பூசியின் உருவாக்கம் என்பது தொற்றுநோய் முடிந்துவிட்டதாக அர்த்தப்படுமா?

தடுப்பூசிகள் முக்கியமான கருவிகள், மற்றும் தடுப்பு மருந்தேற்றல் என்பது ஒரு முக்கியமான செயற்பாடாகும், ஆனால் அவற்றால், அவை தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவராது. உலகளவில் தடுப்பூசிகளை நாங்கள் வெளியிடுகையில், வைரஸ் பரவி அதிக இறப்புகளை ஏற்படுத்தாமல் தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். நாம் சரியாக இருக்கவேண்டும், "அனைத்தையும் சரிவர செய்ய வேண்டும்" அதேவேளை அதை சிறப்பாக செய்ய வேண்டும். இதன் பொருள், தடுப்பூசியுடன், சமூக இடைவெளி தூரத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பது, முகக்கவசம் அணிவது, சவர்காரத்தினால் கைகளை கழுவுதல், காற்றோட்டத்தை அதிகரித்தல், கூட்டத்தைத் தவிர்த்தல், மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்தல், தேவைப்பட்டால் வீட்டிலேயே இருப்பது போன்றவற்றை நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

மேலதிகமாக, இதுவரை, தடுப்பூசிகள் நோயை உருவாக்குவதற்கு எதிராக விளைதிறன் மிக்கதாகத் தோன்றுகின்றன, ஆனால் பரவுவதைத் தடுப்பதில் அவற்றின் தாக்கம் எங்களுக்குத் தெரியாது. இது குறித்து எங்களுக்கு கூடுதல் சான்றுகள் தேவை என்பதுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆய்வுகள் இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க உதவும். எனவே, தடுப்பூசி பெறும் ஒவ்வொருவரும் சமூகத்தில் உள்ள அனைவரையும் பாதுகாக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வது மிகவும் முக்கியமாகும். இதன் பொருள், தடுப்பூசியுடன் சமூக இடைவெளி தூரத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பது, முகக்கவசம் அணிவது, சவர்காரத்தினால் கைகளை கழுவுதல், காற்றோட்டத்தை அதிகரித்தல், கூட்டத்தைத் தவிர்ப்பது, மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்தல், தேவைப்பட்டால் வீட்டிலேயே இருப்பது போன்றவற்றை நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

World Health Organization
Sri Lanka

@WHOSriLanka
www.who.int/SriLanka